மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2022ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19ம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.05/2022
உள்
அசல் வழக்கு எண்.25/2020
-------------

1. மாரியப்பன்
2. மகேஷ்பாபு
3. பாலசுப்பிரமணியன்
4. காமாட்சி
5. சுந்தரம்மாள்
6. செல்லத்தாய் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. குருவம்மாள் (இறப்பு)
2. சுப்புலட்சுமி
3. அழகர்சாமி
4. வட்டாட்சியர் அவர்கள்
சாத்தூர் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

ராமதிலகம் ... உத்தேச எதிர்மனுதாரர்/உத்தேச 5ம் பிரதிவாதி

இந்த மனு 17.03.2021ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 10.10.2022ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.ஆர்.முருகன் அவர்கள் ஆஜராகியும், 4ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அரசுப்பணிகள் வழக்கறிஞர் திரு.கே.குமரவேல் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தோன்றா தரப்பினராகியும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதார்கள் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**உத்தரவு**

இம்மனுவானது காலவரையறைச்சட்டம் பிரிவு 5-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசான உத்தேச 5ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் உத்தேச 5ம் பிரதிவாதியாக சேர்க்க கோரும் மனுவில் அபேட்மெண்ட் ஆனதை ரத்து செய்யக்கோரி மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 88 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மேற்படி வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 17.03.2022ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

அசல் வழக்கில் 1ம் பிதிவாதியான குருவம்மாள் என்பவர் கடந்த 21.09.2020ம் தேதி இறந்துவிட்டார் என்ற விபரம் தற்போது தான் வாதிகளுக்கு தெரிய வந்துள்ளது. மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கடந்த 20.01.2021ம் தேதி 1ம் பிரதிவாதி இறந்த விபரம் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டது. மேற்படி 1ம் பிரதிவாதியின் வாரிசு விபரம் தற்போது தான் மனுதாரர்கள்/ வாதிகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. எனவே உத்தேச 5ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதியை சேர்ப்பதில் காலதாமதம் ஏற்பட்டு விட்டது. மேற்படி செயல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாகும். மேலும் இத்துடன் தனியாக மேற்படி 1ம் பிரதிவாதியின் வாரிசை சேர்ப்பதில் அபேட்மெண்ட் ஆனதை ரத்து செய்யக்கோரி மனுவும், 1ம் பிரதிவாதியின் வாரிசை சேர்க்கக்கோரி மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசான உத்தேச 5ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் உத்தேச 5ம் பிரதிவாதியாக சேர்க்கக்கோரும் மனுவில் அபேட்மெண்ட் ஆனதை ரத்து செய்யக்கோரி மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 88 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மேற்படி வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாதுபோனால் மனுதாரர் தரப்பில் அநேக கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக்கூடும். எனவே இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசான உத்தேச 5ம்

எதிர்மனுதாரரை அசல் வழக்கில் உத்தேச 5ம் பிரதிவாதியாக சேர்க்கக்கோரும் மனுவில் அபேட்மெண்ட் ஆனதை ரத்து செய்யக்கோரி மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 88 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மேற்படி வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 17.03.2021ம் தேதி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**3). 4ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரை சுருக்கம்**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் காலதாமதத்திற்கான எந்த விளக்கமும் தெரிவிக்கப்படவில்லை. மேலும் மனுதாரருக்கு கடந்த 20.01.2021ம் தேதியில் தெரிய வந்ததாக தெரிவித்து உள்ளார். ஆனால் மனுதாரர் 88 நாட்கள் காலதாமதமாக மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி 88 நாட்கள் காலதாமதத்திற்கான போதுமான காரணத்தை தெரிவிக்கவில்லை. மேலும் இறந்துபோனவரின் வாரிசுகளை அசல் வழக்கில் அவசிய கட்சியாக சேர்ப்பதற்கும் மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவும் தாமதமாகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காலதாமதத்திற்கான காலத்தை தவறாக கணக்கிட்டு மனு தாக்கல் செய்துள்ளார். அதனால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது 4ம் எதிர்மனுதாரர் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்உரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5). மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**7). தீர்வு:-**

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த வழக்கில் இந்த சூழ்நிலையில் ஏற்புடையதாக உள்ளது.

எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரர்களால் இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசான உத்தேச 5ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் உத்தேச 5ம் பிரதிவாதியாக சேர்க்க கோரும் மனுவில் அபேட்மெண்ட் ஆனதை ரத்து செய்யக்கோரி மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 88 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மேற்படி வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 17.03.2022ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில், மனுதாரர்களால் தங்களது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது. இருப்பினும் இந்த வழக்கில் ஏற்பட்டிருக்கும் கால விரையம் இதர விரையங்களை கருத்திற்கொண்டு மனுதாரர்கள் 4ம் எதிர்மனுதாரர் மற்றும் உத்தேச எதிர்மனுதாரர்/உத்தேச 5ம் பிரதிவாதிக்கு தலா ரூ.500/-ஐ செலவு தொகையாக வரும் 07.11.2022ம் தேதியன்றோ, அதற்கு முன்பாகவோ செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசான உத்தேச 5ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் உத்தேச 5ம் பிரதிவாதியாக சேர்க்க கோரும் மனுவில் அபேட்மெண்ட் ஆனதை ரத்து செய்யக்கோரி மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 88 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மேற்படி வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 17.03.2022ம் தேதி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து, மனுதாரர்கள் 4ம் எதிர்மனுதாரர் மற்றும் உத்தேச எதிர்மனுதாரர்/உத்தேச 5ம் பிரதிவாதிக்கு தலா

ரூ.500/-ஐ செலவு தொகையாக வரும் 07.11.2022ம் தேதியன்றோ, அதற்கு முன்பாகவோ செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அழைக்க வாய்தா 07.11.2022

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.